# Summaries in Tamil

## மரணத்தைவாழ்தல்,வாழ்வைமீட்டெடுத்தல்: கிழக்கு ஜெருசெலேமில் உளசமூகஎதிர்ப்புச் சக்தியும் மற்றும் இறந்தவர்களின் பலமும்

*Nadera Shalhoub-Kevorkian*

ஆக்கிரமிக்கப்பட்ட ஜெருசெலேம்
பகுதியில் மரணம் மற்றும் மரணித்தல்
என்பவற்றைஆராய்ந்துவரையப்பட்டகட்டுரை
ர இதுவாகும். பலஸ்தீனத்தில்
பலதரப்பட்டமுறைகளில் இழப்புக்களைச்
சந்தித்ததனியாட்கள்,குடும்பங்கள்,சமூகங்க
ளின் வாக்குமூலங்களின் அடிப்படையில்
நடைமுறைகள்,மரணம்
தொடர்பானதனிப்பட்டஅனுபவங்கள்,மரணத்
திற்குப்
பின்னரானவாழ்க்கைஎன்பவற்றைஆராய்கிற
து. வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் மத்தியில்
மட்டுமல்லாது இறந்தவர்கள்,மற்றும்
பலஸ்தீனத்தின்
நல்லடக்கநிலையங்களிலும்
காலநித்துவத்தின் செல்வாக்குஎவ்வளவு
தூரம் காணப்படுகிறதுஎன்றவிடயத்தை இக்
கற்கைவெளிச்சம் போட்டுக்
காட்டுகிறது.அன்பிற்குரியவர்களை
இழந்தவர்களின் கதைகளில்
இருந்துகற்கின்றஅதேநேரம்
இக்கற்கையானது இறப்புகள் நடத்த
இடங்களில் காணப்பட்ட
(உருவாகிக்கொண்டிருக்கின்ற)
உளஅரசியல் அதிகாரத்தினையும்
வெளிச்சம் காட்டுகின்றது. கிழக்கு
ஜெருசலேத்தில் இறந்தவர்கள் மேலாகக்
காணப்பட்டகாலனித்துவஅதிகாரம்
இங்குகுறிப்பிடும்படியா இருக்கின்றது.
காலணித்துகஅதிகாரத்தினை
இல்லாதொழிக்கின்றஅதேநேரம்
புதியஅதிகாரத்திற்கான,நம்பிக்கைக்கான,ம
ற்றும் எதிர்காலத்தினைகட்டியெழுப்புகின்ற
இடத்தினைஉருவாக்குகின்றதனிப்பட்டவர்க
ளினதும் சமூகங்களினதும் பலம்,
இவற்றைமட்டுமல்லாதுஉளசமூகநன்னிலை
மற்றும்
உள்ளார்ந்தமனஅமைதிக்கானசந்தர்ப்பங்க
ளையும் வழங்குகின்றது.
இவ்வாய்வறிக்கையானதுபலஸ்தீனசமூகங்க
ளில் இறப்புமற்றும் இறக்கின்றதறுவாயிலும்
காணப்படும்குணமாக்கல் மற்றும்
ஒற்றுமைநடைமுறைகளைமையப்படுத்திமு
டிவிற்குவருகின்றது.
இந்தஅன்றாடஉளசமூகநடைமுறைகள்
இந்தசமூகத்திற்கான
இழப்பிற்கானஎதிர்வினைகளுக்கானஉத்திக
ளைகொடுக்கின்றது.

**முக்கியசொற்கள்**: யுத்தப்
பிரதேசங்கள்,இறப்புஇ
இறத்தல்,பலஸ்தீனம்,உளவியல்
வருந்துதல்,ஆக்கிரமிக்கப்பட்டகிழக்கு
ஜெருசலேம்,மனவடு,குடியேறிகளின்
காலனித்துவம்

---

## குவாதமாலாவின் மாயன் இனப் பெண்கள் மத்தியில் ஆக்கத்திறனைஒரு இடையீட்டுயுக்தியாகஉபயோகித்தல.

*M. Brinton Lykes & Alison Crosby*

மாயன் இனத்தவர்களின் கதை கூறல்
மற்றும்கிரியைமுறைகளில் காணப்படும்
ஆக்கத்திறனின் மாற்றத்தைஏற்படுத்தக்
கூடியசக்தியை
இக்கட்டுரைஆராய்கிறது.குவாதமாலாவின்
36 வருடஆயுதமுரண்பாட்டின்
போதுஏற்படுத்தப்பட்டபாரியஅளவிலானமனி
தஉரிமைமீறல்களைஅனுபவித்தமாயன்
இனப் பெண்கள்மத்தியில் உளசமூகமற்றும்
பெண்ணிலைவாதச்
செயற்பாடுகளுக்கானயுக்தியாக இவை
பாவிக்கப்பட்டன.கட்டுரையாளரகள்
ஆக்கத்திறனைஅடிப்படையாகக்
கொண்டஒருதொகுதிபயிற்சிப்பட்டறைகளை
ப் பெண்களுடன் நடத்தினர்.
முரண்பாட்டின் விழைவுகளுக்குமுகம்
கொடுப்பதற்குஆக்கத்திறனைஉபயோகித்த
ல் பற்றியவிளக்கம் மற்றும்
மதிப்பீடுகளைமாயன் பெண்கள்
வழங்கினர். இந்த இடையீடுகளால்
தனியாட்களில் மற்றும் குழுக்களில்
மாற்றம்
ஏற்படுத்தமுடிகின்றதுஎனகட்டுரைவாதிடுகிற
து. அத்துடன் இவ் இடையீடுகள்
சமூகங்களையும் மாற்றத்திற்குத்
தூண்டுகின்றன.

**முக்கியசொற்கள்:** ஆக்கத்திறன்,
குவாதமாலா,மாயன்,உளசமூகசெயற்பாடுக
ள்,பெண்கள்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

## இரவில் தாண்டிச் செல்லும் கப்பல்கள்: வடக்குஅயர்லாந்தில் இளம் ஆண்களின் மத்தியில் பரந்தஅளவிலானசமாதானக் கட்டியெழுப்பல் உளசமூகச் செயற்திட்டம்

***Brandon Hamber & Elizabeth Gallagher***

1998 ல் சமாதானஉடன்படிக்கைகைச்சாத்திடப்பட்டபின்னர்,இளம் ஆண்களுடனான இடையீடுகளின் அடிப்படையில் வடக்குஅயர்லாந்தில் முரண்பாட்டின் தாக்கங்களைஆராய்கிறது. உளசமூகவேலையில் ஈடுபட்டுள்ள 4 குழுக்களுடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இரு பொதுவானஆதரவுக் குழுக்களும் வேறு இரண்டுகுழுக்களும் குறிப்பாகமுரண்பாட்டின் போதுவன்முறையைஎதிர்கொண்டவர்களுடன் வேலைசெய்யும் குழுக்களும் ஆகும். 18-14 வயதுடைய 20 ஆண்களும் 19 ஊழியர்களும் தனித்தனியேநேர்காணப்பட்டனர். இளையவர்கள் எதிர் நோக்கும் பலபிரச்சினைகள் கடந்தகாலம் மற்றும் நிகழ்காலத்தின் சமூகபொருளாதாரபிரச்சினைகளைமையமாகக் கொண்டவை. முரண்பாட்டைவிபரிப்பதில் இளைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் உள்ளசிக்கல்கள் கடந்தகாலம் பற்றியஅறிவுகுன்றியிருப்பதுகாரணமாகும். மாற்றங்களைஅரவணைத்தல் மற்றும் சமாதானநடவடிக்கைகளின் போது இளைஞர்கள் தமதுதனிப்பட்டமாற்றத்தைசமூகமாற்றத்திற்கானபாதையாகப் பார்க்கின்றனர். அயர்லாந்தில் தனிப்பட்டமாற்றத்திற்கானசட்டகம் மிகவும் முக்கியமானசமாதானமுயற்சிஎன்றும் இது ஏனைய பரந்தஅளவிலானசமாதானமுயற்சிகளிலும்-தொழில் வாய்ப்புஏற்படுத்தல் போன்றவை-மாறுபட்டகண்ணோட்டத்தில் நோக்கப்படுகிறதுஎன்றும் இக் கட்டுரை கூறுகிறது.

**முக்கியசொற்கள்:** பொருளாதாரம், வடக்குஅயர்லாந்து,சமாதானம்,சமாதானம் கட்டியெழுப்பல்,உளசமூக இடையீடுகள்,சமூகமாற்றம்,மனவடு, இளம் ஆண்கள்

## தெற்கு சூடானில் பிள்ளைகளுக்கானஉளசமூகஆதரவு: ஒருமதிப்பீடு

***Ellen Eiling, Marianne Van Diggele-Holtland, Tom Van Yperen & Frits Boer***

வோர் சையில்ட் கோலண்ட்இன் I DEALஎன்றஒருசெயற்திட்டத்தின் வெளிப்பாடுகளின் மதிப்பீடே இக் கட்டுரையாகும். தெற்கு சூடானில் ஆயுதமுரண்பாட்டால் பாதிக்கப்பட்டபிள்ளைகள் மற்றும் இளையவர்களின் இயலுமைகளைவிருத்திசெய்வதற்கானவாழ்க்கைத்திறன் செயற்திட்டம் இதுவாகும். மதிப்பீட்டின் முக்கியநோக்கங்கள்: இச் செயற்திட்டம் நன்னிலைஎன்றால் என்னஎன்றஉள்நாட்டுஎண்ணக்கருவைத் தழுவியுள்ளதா? இடையீடுகளின் வெளிப்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை? என்பவற்றைஆராய்வதாகும். தரம் சார் பங்குவற்றல் முறையைஅடிப்படையாகக் கொண்டபலவிதமானயுக்திகளைஉபயோகித்து இவ் ஆராட்சிமேற்கொள்ளப்பட்டது: குழுச் செயற்பாடுகள்,தனிப்பட்ட இலக்குகள்,(N=110)நேர்காணல்கள். (N=62) பிள்ளைகளின் நேர்காணல்களுக்குப் பலமூட்டஅவர்களின் ஆசிரியர்கள்,பெற்றோரும் நேர்காணப்பட்டனர். பிள்ளைகளின் நன்னிலைபற்றியஎண்ணக்கருவுடன் செயற்திட்டஎண்ணக்கருஒத்துப் போவதாகநேர்காணல்கள் காட்டுகின்றன. பிள்ளைகளால் கூறப்பட்டுமேலும் ஆசிரியர்களாலும்(N=7) இலகுபடுத்துனர்களாலுலம் (N=5)பெற்றோராலும்(N=11)வலியுறுத்தப்பட்டவெளிப்பாடுகளாக,நண்பர்களுடன் முரண்பாடுகள் குறைதல்,சகபாடிகளுடன் முன்னேற்றகரமானஉறவுமுறைபோன்றவை இருந்தன. செயற்திட்டமானதுபிள்ளைகளின் முகம் கொடுத்தல் திறன்களைஅதிகரித்திருப்பதுடன் வகுப்பறையிலும் முன்னேற்றத்தைக் கொடுத்துள்ளதுஎனவெளிப்பாடுகள் காட்டுகின்றன.

**முக்கியசொற்கள்:** ஆயுதமுரண்பாடு, பிள்ளைகள்,பங்குபற்றல் முறையிலானவெளிப்பாடுமதிப்பீடு,உளசமூகஆதரவு,தெற்கு சூடான்


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**பொஸ்நியாமற்றும் ஹெர்சிகோவினாவில் உளசமூக சமாதானகட்டியெழுப்பல்: தனிப்பட்டமற்றும் சமூகமட்டத்திலானமாற்றத்திற்கானஅணுகு முறை**

***Barry Hart & Edita Colo***

பொஸ்னியாமற்றும் ஹெர்சிகோனியாவில் யுத்தத்திற்குமுக்கியகாரணமாக இருந்தவை இன மற்றும் சமயப் பிரிவினைகள் ஆகும். யுத்தத்தின் பின்னரும் இவை தளம்பல் நிலையிலிருந்ததுடன் தற்போதயைசமூகஅரசியற் கட்டமைப்புகளிலம் தாக்கத்தைஏற்படுத்திவருகின்றன. சமூகமற்றும் தனயாள் மாற்றத்திற்கும்,சமூக இணக்கப்பாட்டிற்கும் உளசமூகசமாதானகட்டியெழுப்பல் அவசிமாகிறது. இவ் விடையஙங்களைஆராய்வதற்குபொஸ்நியா சார்ந்தசம்பவக் கற்கைகளை இக் கட்டுரைமுன்வைக்கிறது. உளசமூகமனவடுவிலிருந்துவிடுபடுதல்,பிரச்சினைகளைத் தீர்த்தல்,தன்னம்பிக்கைகட்டியெழுப்பும் பயிற்சிகள்,யுத்தம் பற்றியகதைகளைக் கூறுவதற்குஎற்றபாதுகாப்பான இடங்களைவழங்கல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை இவை எடுத்துக்காட்டுகின்றன. இவற்றின் மூலம் குணப்படுத்தலும் மனப்பாங்குமாற்றமும் நடைபெறுகிறது. இந்தக்கட்டுரையில் உளசமூக,மனவடுத் தகவல்,சமாதானக் உருவாக்கம் என்பனஉணர்வுகளைஉள்ளிணைத்தல்,உளவியல்,காரணிகளை இனம்காணல் என்பவற்றுடன் பொருளாதாரஅபிவிருத்தி,அரசியல் மாற்றத்திற்கானசெயற்பாடுகள் என்பவற்றின் முக்கியத்துவத்தினைகாட்டுகின்றது இவை இரண்டும் தனியானமற்றும் ஒன்றிணைந்தகுணப்படுத்தலுக்குஅவசியமானவை.

**முக்கியசொற்கள்:** மனப்பாங்குமாற்றம், பொஸ்னியாமற்றும் ஹெர்சிகோனியா, இனப் பிரிவினை,அடையாளம்,கதை கூறல்,சமாதானம் கட்டியெழுப்பல்,உளசமூகம், இணக்கப்பாடு,சமூகநடவடிக்கை,நம்பிக்கை

**இழுக்குகளைக்கையாள்தல்: லெபனானில் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டசம்பாஷனை மற்றும் மேடைநாடகம் பற்றியஒருகதை**

***Ali Dokmak***

கட்டுரையாளர் 19 வயதானலெபனான் நாட்டுமாணவர்.வோர் சையில்ட் இன் 'பர்போமிங் பொபீஸ்'என்றயுக்தியைக் கையாண்டதனதுஅனுபவத்தைவிளக்குகிறார். 2009 ஆண்டுமுதல் நாட்டில் இருந்தமுரண்பாடுகள்,யுத்தம் ஆகியவற்றின் வரலாறுதொடர்பானசம்பாஷனைகளைத் தானும் தனதுநண்பர்களும் எவ்வாறுகட்டியெழுப்பினர்,எவ்வாறுஞாபகங்களைப் பகிர்ந்துகொண்டனர் எனக் கூறுகிறார். பலவிதமானசமயமற்றும் அரசியல் குழுக்களால் பிளவுபட்டுள்ள இந் நாடுபலகாலமாகப் பாரியமுரண்பாடுகளுக்குமுகம்கொடுத்துவந்துள்ளது. இவ் யுக்தியின் நோக்கமானது, இது 'மற்றவர்கள்' பற்றியபுரிந்துணர்வைமேலும் வளர்க்கும் என்பதாகும்.

**முக்கியசொற்கள்:** ஆயுதமுரண்பாடு, வரலாறு,லெபனான்,மேடைநாடகம்

---

**முரண்பாட்டிற்குப் பின்னரான சூழ்நிலையில் வேலைசெய்வதன் உளசமூகத் தாக்கங்கள்: மனவடுவுக்குள்ளாக்கப்படல் தொடர்பானஒரு சுய தொகுப்பு**

***Giorgia Doná***

இக் கட்டுரையின் எழுத்தாளர் போன்ற,முரண்பாட்டிற்குப் பின்னரானநிலரமகளில் வேலைசெய்யும் உளசமூகத் தொழிலாளர்கள்,ஆராட்சியாளர்கள் எதிர்கொள்ளும் உளசமூகத் தாக்கங்களை இக் கட்டுரைவிபரிக்கிறது. முரண்பாட்டிற்குப் பின்னரானறுவாண்டாவில் வசித்தகட்டுரையாளரின் அனுபவத்தின் படி,முதலாம் நிலை, இரண்டாம் நிலைமற்றும் இடம்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

மாற்றப்பட்டமனவடுக்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. வெவ்வேறுநிலைகளிலானமனவடுக்களைவிளங்கிக்கொள்ளல்,அவற்றிற்கானதொடர்பினைவிளங்கிக்கொள்ளல் என்பவைமிகவும் முக்கியமானவைஎனஅவர் வலியுறுத்துகிறார். செவிமடுத்தல்,கற்பனைசெய்துபார்த்தல்,ஒத்துணர்வுகொடுத்தல்,அனுபவித்தல் என்பவற்றின் மூலம் எவ்வாறுபலதரப்பட்டமனவடுக்கள் ஒன்றோடொன்னுதொடர்புபடுகின்றனஎன்றுintersectional traumatization என்றபதத்தின் மூலம் விபரிக்கிறார்.

**முக்கியசொற்கள்:** றுவாண்டா,மனவடு, இடம் மாற்றப்பட்டமனவடு

---

### வன்முறையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள சுகாதார சேவகர்களுக்கான வரைதல் சிகிச்சை: அனேகம் ஆராயப்படாதவொரு வளம்

***Fiety Meijer-Degen***

மிகக் கொடூரமான வன்முறையிலிருந்து உயிர் பிழைத்தோருடனான அனுபவத்தின் படி வாய் மொழி வெளிப்பாட்டை மட்டும் மையமாகக் கொண்ட சிகிச்சைகள் போதுமானதல்ல. மேலும், ஆரம்பத்தில் பேச்சு மொழி அற்றதாக இருக்கும் வரைதற் சிகிச்சை முறையானது பல கலாசாரங்களிலும் இருந்து வரும் மக்களின் குணப்படுத்தலில் முக்கிய பங்கு வகிப்பதாக ஆதாரங்கள் காட்டுகின்றன. எனினும் இந்த ஆதாரங்களில் பெரும்பான்மையானவை மேற்கிலுள்ள அகதிகளுடன் செய்த வேலைகளிலிந்தே திரட்டப்பட்டவையாகும். எனவே, இக் கட்டுரையானது வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுடன் தினமும் செய்த வேலைகளின் முடிவுகள் மூலம் இந்த ஆதாரங்களை மேலும் வலுவூட்டுகிறது. கட்டுரையாளர் நெதர்லாங்தைச் சேர்ந்த ஒரு வரைதல் சிகிச்சை நிபுணர். இவர் முரண்பாடுகளுக்குப் பின்னராச 15 பிரதேசங்களில் 35ற்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பயிலுணர்களுக்கு சிறிய வரைதல் சிகிச்சைப் பயிற்சிகளை நடத்தியுள்ளார். பங்குபற்றுனர்கள் முதலில் இச் சிகிச்சை பற்றி அறிந்திராத சுகாதார சேவகர்கள். வரைதல் சிகிச்சை நுணுக்கங்கள் பொதுவாக பயிலுணர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் அர்ப்பணிப்பை அதிகரிக்கச் செய்கிறது என்கிறார் இவ் எழுத்தாளர்.

**முக்கிய சொற்பதங்கள்:** வரைதல் சிகிச்சை, வன்முறையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், உள வடு, பயிற்சி, ஆராயப்படாத வளம், உளசமூகம்

---

### மனிதாபிமான அவசரநிலமைகள் மாற்றத்திற்கான வாய்ப்பை கொடுக்குமா? கொங்கோ குடியரசின் அவசரகாலத்திற்குப் பின்னரான மனநலன், உளசமூக ஆதரவுச் செயற்திட்டங்கள் பற்றிய விமர்சனம்.

***Babak Moayedoddin, Christelle Nangho Makaya & Alessandra Canuto***

மார்ச் 4, 2012ல் கொங்கோவின் தலைநகர் பிரசாவிலியை குண்டு வெடிப்புகள் உலுக்கின. 280 பேர் உயிரிழந்ததுடன் ஏறக்குறைய 15000 பேர் இடம் பெயர்ந்தனர். சம்பவம் நடந்து 2 மாதங்களின் பின்னர், பெருந்தொகையான மக்கள் உளவியல் நெருக்கீட்டுக்கு ஆளாகியிருந்த போதிலும் மிகக் சிலரே பொருத்தமான மனநலன் சேவைகளையோ அல்லது எந்தவிதமான வெளிப்புள் உளசமூக ஆதரவையோ பெற்றனர். அவசரகாலத்தின் பின் நடத்தப்பட்ட ஒரு கள மதிப்பீட்டில் போதுமான அளவில் இல்லாத மனநலன் சேவைகள் விமர்சிக்கப்பட்டன. அத்துடன், பிரசாவிலியில் மனநலன் மற்றும் உளசமூக ஆதரவு தொடர்பான தற்போதய நிலமை பற்றிய மதிப்பீடும் கொடுக்கப்பட்டுள்ளது. அவசரநலமையானது உண்மையில் மனநலன் பற்றிய விழிப்புணர்வையும் இதனை முன்னேற்றுவதற்கான முயற்சிகளையும் கொங்கோவில் தூண்டியுள்ளது எனலாம்.


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**முக்கிய சொற்பதங்கள்:** கொங்கோ குடியரசு, பேரழிவிற்கான பதிலளிப்பு, மனநலன், உளசமூக ஆதரவு

---

**மேற்குஆபிரிகாவில் சகேல் உணவுநெருக்கடியின் போதுசத்துணவுத்திட்டத்தில் உளசமூகஆதரவினைஉள்ளிணைத்தல்**

*Megan McGrath & Alison Schafer*

ஒருபிள்ளையில் உச்சஉடல் மற்றும் அறிவுவளர்ச்சிக்குபோதுமானஅளவுஊட்டச்சத்துதேவைஇ ஆயினிம் இது ஒருபாதுகாவலரால் கிடைக்கின்றஉடல் மற்றும் உணர்வுத் தூண்டல்களிற்குமேலாககிடைக்கவேண்டும். ஊட்டச்சத்துணவுத் திட்டம் மட்டுமல்லாது,ஊட்டச்சத்துடன் தாய் மனநலத்திட்டம்,உளசமூகத்திட்டம் என்பனஉள்ளிணைக்கப்பட்டதிட்டங்கள் பரந்தபயனைநல்கியதனைகாணக்கூடியதாக இருந்தது. இதனைமனதில் கொண்டுயூனிசெவ் தங்களதுசத்துணவுத்திட்டத்துடன் உளசமூகத்திட்டத்தினைமேற்குஆபிரிக்காவின் உணவுநெருக்கடியின் போதானதிட்டத்தில் உள்ளிணைத்தது. 5 ஆபிரிக்கநாடுகளிலுள்ளயூனிசெவ் மற்றும் பங்குநிறுவனங்களுக்குகுறுகியபயிற்சிஒன்று சத்துணவுத்திட்டத்தில் உளசமூகசெயற்பாடுகளைச் செய்வதற்கானஆழுமையைவளர்க்கஒழுங்கமைக்கப்பட்டது.

**முக்கியசொற்கள்:** சிறுவர் பாதுகாப்பு,சத்துணவு,உளசமூகதூண்டுதல், சகேல்,பயிற்சி,மேற்குஆபிரிக்கா



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.